மங்கையவள் தன் தங்கக் கரத்தாலே

தன்னுயிரில் பாதியெனும் தலைவனுக்கு

நிலவு கண்டு மலர்கின்ற குமுதம்போல்

முகம் மலர்ந்தே அமுது படைகின்றாள்

அன்னவனும் அன்னமவள் அன்னமிடும்

அழகினிலே அகமகிழ்ந்து

அரும்பசியைப் போக்குகின்றான்

பாவையவள் கொணர்நிதிருந்த நீர் பருகித்

தாகத்தினைத் தீர்க்கின்றான்

பசித்து அழும் சேயினுக்குப்

பாலூட்டும் தாயினைப் போல் தையலுமே

தன் கைத்தலம் பற்றிய
தலைவனுக்குப்பரிவுடனே

மீண்டும் மீண்டும் தட்டினிலே உணவுஇட்டு

அவனை வேண்டும் மட்டும் உண்ணவைத்து

அவன் புசித்திடும் அழகினை

ரசித்திடுகின்றாள் - மனத்திலே

இன்பந்தனை ருசித்திடுகின்றாள் !

அன்று காவிரிப் பீம்பட்டிணத்துக்

கடற்கரையில் நான் கண்டகாட்சி இதுவே !

மனத்திரையில் அழியாத சித்திரமாய்

ஆழப்பதிந்து விட்ட இனிதான காட்சியிது
என்பேன்.

## பகுதி – 2

கரையினுக்குத் திரும்புகின்ற கணவனையும்

உணவுடனே சென்று வரவேற்று

அவன் போதும் எனும் மட்டும்

அன்போடு அமுதிட்டு

ஆரணங்கும் அகம் மகிழ்ந்த

அழகுக் காட்சியினை நேரில்

நான் கண்டபோது –

என் நெஞ்சினிலே எழுந்த எண்ணங்கள்
எத்தனையோ உண்டு

அவை அத்தனையும் சொல்லில் நீளும் -
எனவே முத்தனைய

எண்ணம் ஒன்று மட்டும் சொல்வேன் -கேளீர்!

மனைவாழ்வின் மாட்சியினை

இக்காட்சியிலே கண்டேன்!

மணவாழ்வின் மாண்பினையும்

இல்வாழ்வின் சிறப்பினையும் உணர்ந்தேன்!

ஒரு ஆடவனின் வாழ்க்கை முழுமைபெற –
வாழ்வு நிறைவுபெற

அவன் வாழ்வினிலே பெண்ணொருத்தி

இடம் பெறல் வேண்டும்!

பெண் இனத்திண் வாசனையே அறியாது
வாழ்தலினால் என்ன லாபம்?

எனவே எந்த ஒரு ஆண்மகனின்
வாழ்வினிலும் பெண் ஒருத்தி வரல் வேண்டும்

ஒரு ஆடவனின் வாழ்வினிலே அவ்வாறு

வருகின்ற வஞ்சியவள் எந்நிலையில்

வரவேண்டும் என்பதுதான் கேள்வி!

அக்கேள்விக்குத் தக்கபதிலாக
அமைந்ததுதான்

அன்று காவிரிப் பூம்பட்டினத்துக்
கடற்கரையில் நான் கண்ட காட்சி!

கானளயொருவன் வாழ்வினிலே வருகின்ற
மங்கையவள்

மனைவி என்ற நிலையினிலே வரவேண்டும்!

அவ்வாறின்றி ஆசை நாயகியாய்
விலைமகளாய் இடம்பெற்றால்

இவ்வஞ்சியரின் குறுக்கீட்டால் முடிவினிலே

மிஞ்சுவது மாறாத துயரம்தான்!

அன்று கடற்கரையில் நான்கண்ட

மீனவனின் வாழ்வினிலே

ஆசை நாயகிகள் ஆயிரம்பேர் இருந்தாலும்

அதில் ஒருத்தி வருவாளோ கடற்கரைக்கு?

தருவாளோ அமுதம்தான் அன்போடு?

பெறுவாளோ ஆனந்தம் அதனிலவள்?

நிலவுகண்டு மலர்கின்ற குமுதம்போல்

அவன் வரவுகண் மலர்ந்திடுமோ அவள் அகமும் முகமும்?

ஆசைநாயகியாய் இல்லாமல் காளையவன் வாழ்க்கைப்

பாதையிலே குறுக்கிட்ட ஏந்திழையும்

தன்பூந்தளிர் மேனிதன்னை விற்கின்ற

விலைமகள் எனில் அவள் போவாளோ

கடற்கரைக்குப் பரிவோடு பசி போக்க உணவோடு?

அப்படியே கஞ்சியுடன் வரவேற்க வஞ்சி ஒருத்தி

தன் நெஞ்சினிலே ஆசை மிகக் கொண்டாலும்

பருந்து போல வட்டமிட்டு அவள்

இளம் மேனிதன்னில் பருவவிருந்து

கொள்ளக் கூடுகின்ற காளையரில்

யாரை விடுத்து யாரைமட்டும்

தனித்துக் கவனித்திட இயலும் அவளால்?

விழியிரண்டும் பூத்துப்போகும்மட்டும்

வருகின்ற வழியினையே பார்த்துப் பார்த்து

அவன் வருகின்ற வரையிலுமே நிலமகளின்

பொறுமையுடன் காத்துக்கிடக்க மனைவி என்னும்

நிலையில் வரும் குலமகளாலன்றித் தன் இளமைக்கு

விலை கூறும் விலைமகளால் கூடுமோ?

பூக்காடாய் மணக்கின்ற வாழ்வாகும் மணவாழ்வு!

செந்தேனாக இனிக்கின்ற வாழ்வன்றோ இல்வாழ்வு?

மனைவாழ்வின் மாட்சியுமே வீழ்ச்சியுற்று

வருகின்றது இந்நாள்!

இல்லங்கண்டு துணைவியுடன் இனிதுவாழும்

இல்வாழ்வுக்கோர் அறைகூவல் இன்று

இளமை வேகத்தில் துடித்து நிற்கும் இளஞ்சந்ததியிடமிருந்து!

திருமணம் என்பதே இல்லாத ஒரு புதுநிலை உருவானால்

அதனை நெஞ்ச நிறைவோடு வரவேற்கக் காத்திருக்கும்

இளையோர் கூட்டமுண்டு நாட்டினிலே இன்று!

கன்னியொருத்தியை மணம் முடித்து

வாழ்வு முழுமைக்கும் துணையாக அவளை

ஏற்று அன்புக் கடலினிலே மூழ்க வைத்து

இன்பந்தனை அள்ளிக் குவித்து – அதனை

இருவருமே தமக்குள் பங்கு பிரித்து

ஈருடல் ஒருயிராய் இணைந்து வாழும்

சீரிய வாழ்வு முறையாம் மணவாழ்வினை

காலங்காலமாகக் கடைப்பிடிக்கப் பட்டு வந்த

நல்லமரபினை – வெற்று மரபு எனலாமோ?

வழிவழிவந்த பண்பாட்டினை விட்டுவிடலாமோ

ஆயிரங்காலத்துப் பயிர் எனப் பண்டுதொட்டு

போற்றப்பட்டு வந்த திருமணம்

பொருளற்றுப் போய் விடலாமோ?

ஆண் பெண் உறவினுககு

உலகத் தோற்றம் முதல் இன்று வரை

சீரியதோர் தீர்வாகத் திகழ்ந்துவரும்

திருமணம் என்னும் நெறிமுறையை

வெறும் வேடிக்கை எனலாமோ?

ஆண் பெண் உறவினுக்கு - ஹிப்பிகள்போல்

வாழ்தல்தான் சரியெனலாமோ? செப்பிடுவீர்!

ஆடை எதுவுமின்றி ஆணும் பெண்ணும்

பிறந்த மேனியோடு உடல்முழுதும்

திறந்து காட்டித்திரிதலும் தகுமோ? புகல்வீர்!

ஆண் பெண இருபாலினரும் எதிர்ப்படும்

எதிர்பாலார் எவரெனினும் அவரோடு

ஒழுங்கின்றி விலங்குகள் போல-

கூடிக் களித்திடும் இழிமரபும் சரிதானோ?-
சொல்வீர்!

காமத்தை தணிக்க இவ்வுறவு வழிதரலாம்-
ஆயினும்

காலமெல்லாம் இன்ப வாழ்வுக்கு

உறுதி ஏது அவ்வுறவில் ? – உணர்வீர்!

மணக்கோலம் மாங்கல்யம் மனைவாழ்வு

இவையாவும் - தடையென்றும்
தளையென்றும்

தள்ளிவிட்டு - இன்றொருவன்
நாளையொருவன்

நாளைமறுநாள் வேறொருவன் என்று-

மனம் போன போக்கில் ஆண்களுடன்
உடலின்

அடிப்படையில் உறவுகொண்டு வாழ்தலுமே

நிலையான இன்பந்தனைத் தந்திடுமோ

பெண்ணுக்கு -- சிந்திப்பீர்!

திருமணம் என்னும் பந்தம் எதுவுமின்றி

விலங்கினம் போல் மணம் போனபடி

யாரோடும் கூடிவாழ்கின்ற வேளையிலே

பெண்ணொருத்தித் தாய்மை எய்தி

சேய்தன்னைப் பெற்றெடுத்தால்

அச்சேயினையும் பார்ப்பது யார்?

அதனைப் பேணிக் காப்பது யார்?

மனைவி மக்கள் என்று குடும்பமாக

இல்லங்கண்டு வாழ்தல் மேன்மை!

பறவை இனத்தில் கூட இவ்வழக்கம்
உண்டு!

சில உயர் இனத்துப் பறவைகள் கூடக்

காதலித்துத் தமக்கென்று கூடமைத்து

ஒன்றை விட்டு ஒன்று பிரியாமல்

வேறு துணை எதையும் நாடாமல்

இணையாக வாழ்தல் உண்டு கற்போடு!

காலத்தின் வேகத்தில் மாறிவரும்எண்ணங்கள்
புதிது புதிதாகக் தோன்றுகின்ற

புதிய அலைக் கருத்துக்கள், தத்துவங்கள்

எத்தனைதான் வந்தாலும்

ஆண்பெண் உறவுபற்றி ஒருகருத்தே

என்றென்றும் நிலைக்கும் -

காலத்தினை அதுவும் வென்று நிற்கும்!

அக்கருத்தும் என்னவென்றால்

காளையொருவன் வாழ்வினிலே

நீடித்த நிலையான நிரந்தர

இன்பத்துக்கு ஒரே விடை

மனைவியென்னம் நிலையில்வரும்

மங்கையே என்பதாகும்!